

புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2053 | மார்ச் 31, 2022 | புரட்சி 21 | முழக்கம் 11 | விலை: ரூ.3.00


# பெரியார் ஏன் இராமாயணத்தை எதிர்த்தார்?

# மாநிலங்களவையில் பார்ப்பன எதிர்ப்புக் குரல்

***பண்டைக்கால இந்தியா சமூகத்தை மேம்படுத்தாது; வேதகாலத்துக்கு திரும்பக் கூடாது என்று பெரியார், அம்பேத்கர் கருத்தை சுட்டிக்காட்டி மாநிலங்களவையில் உறுப்பினர்கள் பேசினர்.***

மாநிலங்களவையில் மார்ச் 25, 2022 அன்று பார்ப்பன எதிர்ப்புக் குரல் ஒலித்திருக்கிறது. பாரதிய ஜனதா கட்சியின் மாநிலங்களவை உறுப்பினர் ராகேஷ் சின்ஹா தனிநபர் மசோதா ஒன்றை கொண்டு வந்தார்; மீண்டும் வேத காலத்து சிந்தனை மரபுக்கு திரும்ப வேண்டும் என்று இந்த மசோதா வலியுறுத்துகிறது.

“நமது பழைய அறிவு சிந்தனை மரபுகளை மீட்டெடுப்பதற்கு மாநில அளவிலும்,மாவட்ட அளவிலும், தேசிய அளவிலும் ஆய்வு மய்யங்களை உருவாக்கி, அந்த அறிவு மரபை, பழம் பெருமையை மீட்டு எடுக்க வேண்டும் என்று மசோதா கூறியது. அது மட்டுமின்றி மேற்கத்திய கல்வியும்,மெக்காலே கல்வியும் நம்முடைய பண்டைக்கால அறிவு மரபை சிதைத்து நமது சிறப்புகளைக் குலைத்து நம்மை தனிமைப்படுத்தி விட்டது” என்றும் அந்த மசோதா கூறுகிறது.

திருணாமுல் காங்கிரஸ் உறுப்பினர் ஜவகர் சர்க்கார் இதற்கு கடுமையான பதிலடியை கொடுத்தார். “நீங்கள் பேசுகிற பழைய மரபு என்பது எது? வரலாறுகளில் கூட அதை ஒரு சார்பாகத் தான் நீங்கள் எழுதி வைத்திருக்கிறீர்கள். சாம்ராட் அசோகன், புத்தர் மரபில் வந்தார் என்பதற்காக வரலாறு முழுதும் அவரை இருட்டடித்தீர்கள். 1837 இல் கொல்கத்தாவின் ஆசியாடிக் சொசைட்டி தான் அசோகர் என்ற ஒரு மன்னர் புத்தர் மரபில் வந்து நல்லாட்சி செய்தார் என்ற உண்மையை வரலாற்றில் முதல் முதலாக வெளிக் கொண்டு வந்தது. நீங்கள் பேசுகிற அறிவு மரபு பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாக **ஒரு குறிப்பிட்ட சாதியை வளர்ப்பதற்கும், பார்ப்பனிய கலாச்சார ஆதிக்கத்தை உருவாக்குவதற்கும் தான் பயன்பட்டது**” என்று அவர் பதிலடி கொடுத்திருக்கிறார்.

தொடர்ந்து ராஷ்ட்ரிய ஜனதா தள கட்சி உறுப்பினர் டாக்டர் மனோஜ் குமார் ஜா பேசுகையில் “இன்றைய சூழ்நிலையில் கற்பனைகளை வரலாறாகவும், வரலாறுகளை கற்பனைகளாகவும் எழுதிக் கொண்டிருக்கிற போது, பழைய மரபுகளை மீண்டும் கொண்டு வருவது என்பது எந்த பயனையும் விளைவிக்கப் போவது இல்லை. பழைமை என்பதற்காக எதையும் நாம் கொண்டாட முடியாது. டாக்டர் அம்பேத்கர் மேற்கத்திய கல்வி முறையைத் தான் ஆதரித்தார். காரணம் அந்தக் கல்வி முறை தான் அனைவருக்குமான கல்வியாக இருந்தது”.

நான் பெரியாரை மேற்கோள் காட்ட விரும்புகிறேன். அவர் பெயர் மட்டுமே இங்கு பலருக்குத் தெரியும்; அவரது நூல்கள், சிந்தனைகள் பற்றி பலருக்கும் தெரியாது. அவர் ‘உண்மை இராமாயணம்’ என்று தமிழில் எழுதிய நூலை இந்தியில் ‘சச்சி இராமாயணம்’ என்று மொழி பெயர்த்து வெளியிடப்பட்டது. உ.பி. அரசு தடை போட்டது; மக்கள் போராடினார்கள். வழக்கை விசாரித்த அலகாபாத் உயர்நீதிமன்றம் கூறிய தீர்ப்பை படித்துக் காட்டுகிறேன்.

“இந்து மதத்தைப் புண்படுத்தும் நூல் அல்ல; அப்படி இருந்தால் அயர்லாந்து நாட்டில்கூட ‘அய்ரீஷ்’ மதக்காரர்கள் போராடியிருப்பார்களே; இது ஒரு சமூகத்தின் நியாயத்தைப் பேசும் நூல். சமூகத்தின் நீதியைக் கேட்பதே நூலாசிரியரின் (பெரியாரின்) நோக்கம். நிச்சயமாக இந்த நூல் சட்டத்துக்கு எதிரானது அல்ல” என்று உயர்நீதி மன்றம் கூறியது.

பண்டைக்கால இந்தியா எதைப் பேசியது? உ.பி., இராஜஸ்தான், மத்திய பிரதேசம் மாநிலங்கள் இப்போது ‘பசுமாட்டுப் பிரதேசங்கள்’ (Cow belt) என்று கூறப்படுகின்றன. பண்டைக்கால இந்தியாவுக்கு இவை சான்றுகள். தமிழக உறுப்பினர்களும் கேரள மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் சிவதாசனும் இதையே இங்கே சுட்டிக் காட்டினார்கள். இப்படி ‘பசு மாட்டு’ப் பெருமைகளைக் கூறிக் கொண்டு இந்தியாவை ‘ஏக் பாரத்’ சிறந்த இந்தியா என்று எப்படிக் கூற முடியும்? காஷ்மீர் முதல் கன்யாகுமரி வரை ஒரே இந்தியா என்று நீங்கள் கூறுகிறீர்கள். இதை எப்படி உருவாக்கப் போகிறீர்கள்? இது ஒரே ஒரு இனத்துக்கான உரிமை கொண்ட நாடு என்ற கருத்தை நீங்கள் மாற்றிக் கொண்டு பல்வேறு மொழி, இனங்களைக் கொண்ட நாடு என்பதை அங்கீகரிக்க வேண்டும்? நாம் கடந்து வந்த பண்டைக்கால இந்தியா என்பது இழிவானது (Journey of the past is an ugly way), கல்வி என்ற சொல்லுக்குப் பல அர்த்தங்கள் உண்டு. ஆனால் அதன் நோக்கம் சமூக வளர்ச்சிக்கு அது கருவியாக்கப்பட வேண்டும். அடிமைச் சங்கிலிகளால் கட்டப்பட்ட மக்களை விடுவிப்பதாக இருக்க வேண்டும். அது தத்துவம் சார்ந்த அடிமையானாலும் மதம் சார்ந்த அடிமையானாலும் எந்த வகையான அடிமைத்தனமாக இருந்தாலும் சரி, மக்கள் விடுதலை செய்யப்பட வேண்டும். அத்தகைய கற்பித்தலும் சிந்தனையுமே தேவை; பண்டைக்கால சிந்தனைகள் இதற்கு பயன்படாது” என்றால் அவர்.

## போலிப் பழம் பெருமை வேண்டாம்; அறிவியல் வழியே தேவை



பழங்காலத்தை நினைவூட்டுவது மட்டுமே அருங்காட்சியகங்களின் பணி அல்ல; புதுமையையும் எதிர்காலத்தையும் நோக்கி நம்மை விரைவுபடுத்துவதும்கூட அதன் பணி என Museum of The Future தொலைநோக்கு அருங்காட்சியகம் காட்டியது.

போலியான பழம்பெருமைகளைப் பேசி மூடத்தனங்களுக்குள் புகுந்துகொள்ளாமல் அறிவியல் வழியில் புதுமையை நாடும் இதுபோன்ற அருங்காட்சியகங்கள் காலத்தின் தேவையாகிறது!

**– முதல்வர் டிவிட்டர் பதிவு**

# ஃபாரூக் நினைவு நாளில் கொளத்தூர் மணி பேச்சு (2)

# ‘மத அடிப்படை வாதம்’ வளருவது சமூக அமைதியை சீர்குலைத்து விடும்

***ஃபாரூக் அய்ந்தாம் ஆண்டு நினைவு நாள் சிந்தனை அரங்கில் கழகத் தலைவர் கொளத்தூர் மணியின் தலைமை உரை. (சென்ற இதழ் தொடர்ச்சி)***

ஃபாரூக் கொலையில் இருந்து நாம் பார்த்தோம். அதில் பல பேர் கண்டனம் தெரிவித்தார்கள். சென்னையில் ஒரு கண்டனக் கூட்டத்தை சில இஸ்லாமியர்கள் நல்லெண்ணத்தோடு முயற்சி எடுத்து நடத்தினார்கள். கோவையில் நடக்கும் என்றார்கள். கோவையில் யாரும் இப்படி கண்டனக் கூட்டம் நடத்தவில்லை. அந்த வருத்தம் எங்களுக்கு இருந்து கொண்டே தான் இருக்கிறது.

அது ஒருபுறம் இருந்தாலும், எந்த ஒன்றும் விவாதத்திற்கு அப்பாற்பட்டது அல்ல; விமர்சனத்திற்கு அப்பாற்பட்டது அல்ல; பெரியாரையும் சேர்த்துத் தான் சொல்கிறோம். இஸ்லாமியர்கள் ஒரு வேளை இங்கே கேள்வி கேட்க வந்திருந்தாலும் நீங்கள் கேளுங்கள். நிகழ்ச்சி முடிந்த பின், உங்கள் கேள்விகளுக்கு பதில் அளிக்கப்படும். நீங்கள் பேசுங்கள், உங்களுக்கு உரிய விளக்கம் கொடுக்கப்படும். அதில் ஒன்றும் எங்களுக்கு தயக்கமே கிடையாது. ஒருவேளை எங்கள் கருத்து தவறாக இருந்தால் உங்களிடம் மன்னிப்பு கேட்கக்கூட தயாராகத்தான் இருக்கிறோம். ஆனால் உங்கள் கருத்து தவறு என்று சொன்னால் நீங்கள் மன்னிப்பு கூட கேட்க வேண்டாம் நீங்கள் அம்பலப்பட்டு நிற்பதே போதும். தாராளமாக வந்து கேள்விகளை கேட்கலாம்.

நாங்கள் இக்கருத்தரங்கில் அப்படி ஒன்றும் பெரிதாக கடுமையான விமர்சனத்தைக்கூட வைக்கவில்லை. ‘இஸ்லாமும் பெண்களும்’ என்று தலைப்பு மட்டும்தான் வைத்தோம் வேறு ஒன்றும் அதில் இல்லை இஸ்லாமியர்களைப் பற்றி எல்லாம் எதுவுமே இல்லை. தலைப்புகள், ’இந்து மதமும் பெண்களும்’ ’இஸ்லாமும் பெண்களும்’ இதைக் கூட தாங்கிக் கொள்ள முடியவில்லை அவர்களால் இது என்ன விதமான மதநம்பிக்கை என்றும் தெரியவில்லை. ஆனால் அவர்கள் சொல்வார்கள் நபிகள் சொல்லி இருக்கிறார்கள் என்றெல்லாம் கூறுவார்கள். ஆனால் நபி, “இஸ்லாத்தில் நம்பிக்கையற்றவர்களை வெட்டுங்கள்” என்று சொன்னதையெல்லாம் ஒருபோதும் சொல்ல மாட்டார்கள்.

அதற்காக சில ஆதாரங்களை முன் வைக்க விரும்புகிறேன். 47 ஆவது அத்தியாயத்தில் 1 முதல் 4 வரை “நிராகரிப்பவர்களை நீங்கள் சந்திப்பீர்களாயின் அவர்களது கழுத்துகளை வெட்டுங்கள்”. இவை எல்லாம் இறை வசனங்கள். இரண்டாவது அத்தியாயத்தில் 191 “அவர்களைக் கண்ட இடமெல்லாம் வெட்டுங்கள்” எட்டாவது அத்தியாயத்தில் “நீங்கள் அவர்களது பிடரியில் மேலிருந்து வெட்டுங்கள் அவர்களைக் கணுக்கணுவாக துண்டித்து விடுங்கள்". எட்டில் நாற்பத்தி ஒன்பதாவது வசனம் “அல்லாஹ்வினுடைய மார்க்கம் நிலைபெறும் வரையில் யுத்தம் புரியுங்கள்”. “கண்ட இடமெல்லாம் வெட்டுங்கள் அவர்களை சிறை பிடியுங்கள் முற்றுகையிடுங்கள் பதுங்கியிருந்து பாயுங்கள்.” “நபியே நீர் இஸ்லாமியர்களை யுத்தத்திற்கு தூண்டுவீராக” என கடவுள் நபிக்கு ஆணையிடுகிறார். “விரோதிகள் ரத்தத்தை பூமியில் ஒட்டாத வரை சிறை பிடிப்பது எந்த ஒரு நபிக்கும் பகுமானம் அல்ல” என யாராக இருந்தாலும் முதலில் ரத்தம் பூமியில் விழ வேண்டும் என்று கூறுகிறது இன்னும் நிறைய சொல்லிக் கொண்டே போகலாம். இவையெல்லாம் எடுத்துக் காட்டுகள் மட்டுமே.

இதைத் தான் நாங்கள் தவறு என்று கூறுகிறோம். இதுதான் பாருக்கை கொலை செய்தவர்களைத் தூண்டியது என்று நாங்கள் சொல்கிறோம். அவர்கள் இல்லை என்று சொல்லட்டும். நாங்கள் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறோம். மேலும் சில செய்திகளைச் சொல்ல வேண்டும் என நினைக்கிறேன். அதில் ஒன்று பெண்களுக்கான சில கட்டுப்பாடுகள் வைத்திருக்கிறார்கள். அதைப் பற்றி பெரியார் இஸ்லாமியர்களின் கூட்டத்தில் பேசிய ஒரு செய்தியை கூறுகிறேன் 1931இல் சாத்தான்குளத்தில் பெரிய பள்ளிவாசலில் நபிகள் பிறந்த நாள் கூட்டத்தில் பெரியார் பேசுகிறார், அப்போது இஸ்லாமுக்கு மாறுங்கள் என்று பேசுகிறார். அதாவது அவர் அங்கிருந்த பல தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மக்களுக்கு அறிவுரை

(4ஆம் பக்கம்)

# ரோஸ்மேரி – ஆவியுடன் பேசி, இசையமைத்தாரா?

*‘நிமிர்வோம்’ மாத இதழில் 2020ஆம் ஆண்டில் வெளிவந்துள்ள கட்டுரையை அதன் முக்கியத்துவம் கருதி மீண்டும் வெளியிடுகிறோம்.*

சென்னை உச்சநீதிமன்ற பதவியிலிருந்த வெ. இராமசுப்பிரமணியம், பதவியில் இருக்கும் போதே சென்னை உயர்நீதிமன்ற நீதிபதியாக இருந்தபோது அறிவியலையே கேள்விக் குள்ளாக்கும் தொடர் கட்டுரை ஒன்றை ‘தினமணி’ நாளேட்டில் எழுதினார். பிறகு உச்சநீதிமன்றத்திலும் நீதிபதியாக இருக்கிறார். அறிவியல் மனப்பான்மையை வளர்த்தெடுக்க வேண்டிய சட்டக் கடமையிலிருந்து விலகி, ‘அறிவியலுக்கு அப்பால்’ அற்புதங்களைத் தேடிய அவரது கட்டுரைத் தொடர் பிறகு நூலாகவும் வெளியிடப் பட்டது. நீதிபதி எடுத்து வைத்த கருத்துகள் அறிவியலா? அறிவியல் என்ற பெயரில் பரப்பப்பட்ட கற்பனைச் சரடுகளா? இந்தக் கேள்விகளுக்கு ஆணித்தரமான மறுப்பைத் தருகிறது இக்கட்டுரை. முக்கியத்துவம் பெற்ற இக்கட்டுரையை அறிவியலில் பகுத்தறிவில் உடன்பாடு உள்ள அனைவரும் மக்களிடம் பரப்ப வேண்டும். - ஆசிரியர்


**எட்வின் பிரபாகரன்**


## உச்ச நீதிமன்ற நீதிபதியின் போலி அறிவியல் வாதங்களுக்கு ஆணித்தர மறுப்பு (1)

நூலின் பெயர் “அறிவியலுக்கு அப்பால்”. 2014ஆம் ஆண்டு வெளி வந்தது. அறிவியலால் விடை கூறமுடியாத புதிர்களாக அவர் தொகுத்த பட்டியலுக்கு மறுப்பு.

**புதிர் 1:** இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த ரோஸ் மேரி பிரவுன் என்பவர், மறைந்த இசைக் கலைஞர்கள் பலரின் ஆவியோடு பேசி அவர்களின் இசையை உள்வாங்கி இசையமைத்தார். இத்தனைக்கும் அவர் இசை கற்காதவர். இன்று வரை அவர் எப்படி இசையமைத்தார் என்பது புரியாத புதிராகவே உள்ளது.

**விடை:** 1994இல் ராபர்ட் கரோல் தொகுத்த “The Skeptics Dictionary”யில் (கேள்வி கேட்போர் அகராதி) இதற்கான விடை உள்ளது. எல்லோரும் சொல்வதை போல, ரோஸ் மேரி பிரவுன் இசை தெரியாத வரல்ல. அவர் 2 ஆண்டுகள் இசை பயிற்சி பெற்ற தகவலும் இந்த அகராதியில் உள்ளது. அது மட்டுமல்லாமல், அவருடைய குடும்பமே இசைக்குடும்பம் என்பதையும் அவர் மறைத்துள்ளார். 1989இல் வேரன் ஜோன்ஸ் எழுதிய “Anomalistic Psychology – A Study of Magical Thinking” என்ற நூலில் ரோஸ் மேரி பிரவுனின் இசைகளை ஆய்வு செய்து, அது அவருடைய ஆழ்மனதில் இருந்து வந்தவையே தவிர, ஆவிகளோடு பேசி பெறப்பட்டவையல்ல என்பதை நிரூபித்துள்ளார். 1989லேயே நிரூபிக்கப்பட்ட ஒன்று, 2014இல் நூலை எழுதிய நூலாசிரியருக்கு புதிராகத் தெரிவது விந்தையிலும் விந்தை.

**புதிர் 2:** ஜூலெஸ் வெர்னே என்ற நாவலாசிரியர் எழுதியவையெல்லாம் அப்படியே பிற்காலத்தில் நடந்துள்ளன. 1870 இல் “Around the Moon” (நிலவைச் சுற்றி என்ற நூலை எழுதினார். அந்நாவலில் அவர் 4 விஷயங்களை எழுதி யிருந்தார். 1. கேப்டவுனில் இருந்து நிலவுக்கு செயற்கைக்கோள் அனுப்பப்படும். 2. செயற்கைக் கோள் கோண வடிவில் இருக்கும். 3. அதில் 3 பயணிகள் பயணிப்பார்கள், 4. 39, 600 கிலோ மீட்டர் வேகத்தில் செயற்கைகோள் நிலவை அடையும். அவர் இவற்றை எழுதி 99 ஆண்டுகளுக்கு பின், இவையனைத்தும் நடந்தன. 1969இல் கேப்டவுனில் இருந்து அப்போல்லோ 11 என்ற கோண வடிவிலான செயற்கைகோள், மூன்று பயணிகளுடன் (எட்வின், ஆர்ம்ஸ்ட்ராங்க், காலின்ஸ்), 38, 500 கிலோமீட்டர் வேகத்தில் நிலவை அடைந்தது. நடக்கப்போவதை முன்கூட்டியே அறிந்து கொள்ளும் ஆன்மீக சக்தி அவரிடம் இருந்தது.

**விடை:** எதிர்காலத்தில் நடக்கப்போகும் அறிவியல் மாற்றங்களை முன்கூட்டியே கணிப் பதற்கு ஆன்மீக சக்தி எதுவும் தேவையில்லை. அறிவியல் போகும் திசையை படித்து, கற்று உணர்ந்திருந்தாலே போதும். பெரியார் தன்னுடைய “இனி வரும் உலகம்” (1943) என்ற நூலில் சோதனைக்குழாய் குழந்தை, அலைபேசி போன்ற எதிர்கால அறிவியல் கண்டுபிடிப்புகளை கணித்து கூறியிருந்தார். இதற்கு காரணம் ஆன்மீக சக்தியல்ல. பெரியார் அறிவியலின் போக்கை உன்னிப்பாக கவனித்ததே காரணம். இது தர்க்கரீதியான பதிலாக இருந்தாலும், ஜூலெஸ் வெர்னே தன்னுடைய கணிப்பைப் பற்றி என்ன சொன்னார் என்று தெரிந்து கொள்வது அவசியமாகும்.

Strand என்ற இதழில், 1895இல், மரியி பெல்லோக் எழுதிய “வீட்டில் ஜூலெஸ் வெர்னே” என்ற கட்டுரை யில் ஜூலெஸ் வெர்னேவின் பேட்டி பதிவாகி யுள்ளது. எதிர்கால கண்டுபிடிப்புகளை வெர்னே நாவலில் குறிப்பிட்டது தற்செய லானது என்றும், கதைகளை எழுதுவதற்கு முன், புத்தகங்கள், செய்தித்தாள்கள், இதழ்கள், அறிவியல் அறிக்கைகள் ஆகியவற்றை படித்து விட்டு எழுதியதாகவும் அவரே ஒப்புக் கொண்டுள்ளார். எனவே, இதில் இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்தி எதுவும் இல்லை.

**(கட்டுரையாளர் கழக செயல்பாட்டாளர்)**


(தொடரும்)


# திராவிடன் மாடலுக்கு கோட்பாடு இல்லையா?

முதல்வர் மு.க.ஸ்டாலின் புகழுரையில் மயங்குவதாகக் காட்ட முயற்சிக்கும் கட்டுரை ஒன்றை தமிழ் இந்து (பிப்ரவரி 21) நாளேடு, அரை உண்மைகள் குழப்பங்களுடன் 'பட்ஜெட் விவாதம் திசை மாறலாமா' என்ற தலைப்பில் வெளியிட்டுள்ளது. பொய்யை விட ஆபத்தானது அரை உண்மை. பாஜகவின் 'குஜராத் மாடல்', ஆம் ஆத்மியின் 'டெல்லி மாடலுக்கு' மாற்றாக "திராவிட மாடலை" முன்னிறுத்தும் திமுக, திராவிட மாடலுக்கான கோட்பாட்டை விவரிக்காமல் சமூக நலத்திட்டங்களை பட்டியலிடுவதாக குற்றம் சாட்டுகிறது கட்டுரை. குஜராத் மாடல் - பச்சை வகுப்புவாதம், தனியார்மயம். ஆம் ஆத்மி மாடல் என்பதோ தனக்கான எந்த மாடலுமே இல்லை என்ற மாடல். இதோடு திராவிட மாடலை சமன்படுத்துகிறது கட்டுரை.

திராவிடன் மாடல் என்பது சமூக நலத்திட்டங்கள் மட்டுமே என்று கூறும் கட்டுரை தன்னுடைய கருத்தை தானே மறுக்கிறது. “தமிழ்நாட்டில் கூலிச் சமமின்மை, குறைந்துவரும் உயர்கல்வியின் தரம் பற்றி பேராசிரியர் கலையரசன் தனது திராவிடன் மாடல் நூலில் சுட்டிக்காட்டி இருப்பதை எடுத்துக்காட்டும் இந்தக் கட்டுரை, இதில் அரசின் கவனம் ஈர்க்கப்பட்டு இருக்கிறது என்று அதற்கு பதிலையும் கூறி விடுகிறது. உலகப் புகழ்பெற்ற பல்கலைக்கழகங்களின் கிளைகளைக் கொண்ட 'அறிவுசார் நகரத்தை' முதலமைச்சர் உருவாக்கி வருவதாக கட்டுரை தனது கேள்விக்கு தானே பதிலையும் கூறுகிறது. கூலிச்சமநிலையுடன் கூடிய வேலைவாய்ப்பை உருவாக்க வேண்டும் என்று திராவிடன் மாடல் நூலாசிரியர்கள் சுட்டிக்காட்டி இருப்பதை எடுத்துக்காட்டும் கட்டுரை அதற்கும் பதிலை கூறி விடுகிறது” அதன் உடனடி தேவையை முதல்வர் உணர்ந்து தூத்துக்குடியில் அறைகலன் பூங்காவை உருவாக்கி 17,476 பேருக்கு வேலை வழங்கும் திட்டத்தை தொடங்கியிருப்பதை ஒரு உதாரணமாக எடுத்துக் கொள்ளலாம். என்று கட்டுரை தனது குற்றச்சாட்டிற்கு தானே பதிலையும் கூறிவிட்டது.

சட்டசபையில் பட்ஜெட் விவாதத்தில் 3,36,000 கோடி திட்டச் செலவுடன் கூடிய நிதிநிலை அறிக்கை குறித்து விவாதங்களை நடத்தாமல், பெரியார் நூல்களை மொழிபெயர்க்க 5 கோடி ஒதுக்கியதை பெரும் பேச்சாக பேசிக்கொண்டிருக்கிறார்கள் என்று குற்றம் சாட்டுகிறது கட்டுரை. பல்லாயிரம் பேர் சட்டமன்றத்தின் நிகழ்ச்சிகளை நேரடி ஒளிபரப்பில் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். விவாதங்கள் பெரியாரை சுற்றி மட்டும் பெரிய அளவில் நிகழவில்லை என்பதை தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை நேரடியாக பார்ப்பவர்களுக்குத் தெரியும்.

திராவிடன் மாடல் என்பது சமூக நலத்திட்டங்களோடு மட்டும் முடங்கி விடவில்லை, தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சி அது சார்ந்த முதலீடுகளை ஈர்க்கும் முயற்சிகள், தமிழ்நாட்டின் சுயாட்சி, உரிமை, பெண்ணுரிமை, இந்தி எதிர்ப்பு, இல்லம் தேடி மருத்துவம், இல்லம் தேடி கல்வி, ஆண்டுக்கு 10 லட்சம் இளைஞர்களை திறன் மிக்கவர்களாகவும் தொழில்நுட்பம் அறிந்தவர்களாகவும் உருவாக்கும் நான் முதல்வன் திட்டம், தேசிய கல்விக் கொள்கைக்கு மாற்றாக தமிழ்நாட்டு கல்விக்கொள்கை உருவாக்கம், வெளிப்படையான நிர்வாகம் என பல்வேறு கருத்தாக்கங்களை செயல்பாடுகளுடன் இணைத்து, ஒவ்வொரு நாளும் திராவிடன் மாடல் தான் இங்கே நடை போட்டுக் கொண்டு இருக்கிறது என்ற உண்மைகளை கட்டுரை ஏன் மறைக்கத் துடிக்கிறது.

சோவியத் ஒன்றியம் சிதைவு, அமெரிக்க இரட்டைக் கோபுர தாக்குதல், உலகமயமாக்கல் என்ற பெயரில் சர்வதேச அரசியலை ஆட்டிப்படைக்கும் சர்வதேச மூலதனம் ஆகியவற்றுக்குப் பிறகு பொருளியல் கண்ணோட்டங்களில் எவ்வளவோ மாற்றங்கள் வந்துவிட்டன. பொருளியல் கோட்பாடுகளில், பொதுவுடைமை பேசிய சீனாவே சந்தை பொருளாதாரத்திற்கும், சர்வதேச நிதி மூலதனத்திற்கும் கதவு திறந்து விட்டதோடு இந்தியாவில் பொதுவுடமை கட்சி ஆட்சி நடத்திய மேற்கு வங்கம், கேரளாவில் கூட பன்னாட்டு நிறுவனங்கள் தனியார் நிறுவனங்களே வேண்டாம் என்ற நிலையிலிருந்து அவர்களின் முதலீடுகளுக்கு கட்டுப்பாடுகள் போடவேண்டும் என்ற எல்லைக்கு வந்து விட்டன. கட்டுரையாளர் கூறும் காந்திய பொருளாதாரத்தை பூதக்கண்ணாடி வைத்துதான் தேட வேண்டி இருக்கிறது. இந்த எதார்த்தங்களை புறந்தள்ளிவிட்டு, திமுகவின் திராவிடன் மாடலுக்கு கோட்பாடு இல்லை என்ற குற்றச்சாட்டை வீசுவதற்கு வலுவற்ற பல வாதங்களை தேடி அலைகிறது இந்தக் கட்டுரை.

பெரியார் நூல்களை நாட்டுடைமை ஆக்க வேண்டும். குடிஅரசு காலகட்டத்திற்குப் பிறகு பெரியாரின் எழுத்தும் பேச்சும் துவக்கப்பட வேண்டும் என்ற கட்டுரையின் கோரிக்கையை நாமும் முழுமையாக ஆதரிக்கிறோம். ஆனால் அந்தக் கருத்துக்கள் திமுகவை குற்றக் கூண்டில் நிறுத்தும் வாதங்களோடு, அந்த வாதங்களுக்கு வலு சேர்க்க உள்நோக்கத்தோடு மலினப்படுத்த முயல்வதுதான் நாம் கடுமையாக சந்தேகிக்கிறோம்.

முதல்வர் தொடங்கும் மாபெரும் தொழில் வளர்ச்சித் திட்டங்களை விட சாலை ஓரத்தில் டீக்கடையில் டீ குடித்த செய்தி பெரிதாக்கப்படுகிறது என்று குற்றம் சாட்டுகிறது கட்டுரை. ஊடகங்களில் டீ குடித்த செய்தியும் வந்தது, அறைகலனிற்கு முதலமைச்சர் அடிக்கல் நாட்டிய செய்தியும் வந்தது. குறிப்பாக இந்து ஆங்கில நாளேடு “Tamilnadu Focus” என்ற பகுதியை உருவாக்கி தொடர்ந்து பல பக்கங்களை தமிழ் நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சித் திட்டங்கள் குறித்து விரிவான ஆய்வுக் கட்டுரைகளை அலசி ஆராய்ந்து எழுதி வெளியிட்டு வருவது கட்டுரையாளரின் கண்களுக்கு படாமல் போய் விட்டது போலும்.

நல்லாட்சி நடத்தும் ஒரு முதல்வருக்கு பாராட்டுகள் வரத்தான் செய்யும் அது இயற்கையானதுதான். முதல்வரை எவருமே பாராட்டக் கூடாது என்று தமிழ்நாடு அரசு ஒரு அவசர சட்டம் பிறப்பிக்க வேண்டும் என்று கட்டுரையாளர் சொல்ல வருகிறாரா ? அதைவிட இந்தப் பாராட்டுகள் முதல்வரின் முக்கியமான பணிகளை பின்னுக்குத்தள்ளி போட்டு விடுகிறது, என்று கட்டுரை கூறுவது தான் உச்சகட்ட அபாண்டம் அவதூறு. “ஆட்சியை எதிர்ப்பதற்கு பல்வேறு முகமூடிகளை அணிந்து பலரும் வந்து கொண்டு இருக்கிறார்கள்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறிய வார்த்தையின் அர்த்தம் இந்தக் கட்டுரையை படிக்கும்போது அழுத்தமாகவே புரிகிறது.

– **இரா**

# எல்லையற்ற அதிகாரத்தால் பங்கு சந்தையை கொள்ளையடித்த ‘மனுவாத’க் கூட்டம்

***கோடியில் புரளும் பங்கு சந்தை வணிகம் ‘மனுதர்ம’ கும்பலிடம் சிக்கி அவர்களின் கொள்ளைக் கூடாரமாக மாறி இருக்கிறது. இப்போது சி.பி.அய். விசாரணை வளையத்துக்குள் அது வந்திருக்கிறது. கடந்த இதழில் வெளி வந்த தகவல்களை சுருக்கமாகத் தொடர்வோம்.***

- *பங்கு சந்தையில் மோசடிகள் நடப்பதைக் கண்டறிந்த பிறகு மன்மோகன் நிதியமைச்சராக இருந்த போது தேசிய பங்கு சந்தை என்ற அமைப்பை உருவாக்கினார், இது தனியார் நிறுவனம். ‘செபி’ என்ற பங்கு சந்தையைக் கண்காணிக்கும் அரசு கண்காணிப்பு அமைப்பின் கீழ் இயங்கி வந்தது. இணையம் வழியாக மட்டுமே உலகம் முழுதும் என முடிவு செய்யப்பட்டது.*
- *பங்கு சந்தையின் தினசரி வணிகம் 2.3 இலட்சம் கோடி.*
- *1994இல் இது தொடங்கியது முதல் 2013 வரை இயக்குனராக இருந்த ‘மனுவாதி’ ரவி நாராயணன் தனக்குக் கீழே பணிபுரிந்த சித்ரா ராமகிருஷ்ணன் என்ற வேத குலப் பெண்ணை இயக்குனராக்கினார்.*
- *ரவி நாராயணன், சித்ரா போன்ற ‘அதிகார அக்கிரகாரப் புள்ளிகள்’, ‘செபி’க்கு தெரிவிக்காமலேயே பல ‘அண்டர் கிரவுண்ட்’ வேலைகளை முறைகேடாக செய்து பங்கு சந்தை வர்த்தகத்தை சில பெரும்புள்ளிகளின் விளையாட்டு மைதானமாக்கியதோடு ஸ்டேட் வங்கி, எல்.அய்.சி. போன்ற அரசுத் துறை நிறுவனங்கள் நுழைந்து விடாது தடுத்து வந்தனர்.*
- *2013இல் சித்ரா, ஆனந்த சுப்பிரமணியம் என்ற அக்கிரகார மனிதரைக் கொழுத்த சம்பளத்தில் (ஆண்டுக்கு 4 கோடி) தனது ஆலோசகராக்கினார். இதுவும் ‘செபி’க்குத் தெரியாது. பல பதவி உயர்வுகள், சம்பள உயர்வுகள் வாரி வழங்கப்பட் செய்தியையும் ‘செபி’க்கு கூறவில்லை.*
- *கோலொக்கேஷன் என்ற வணிக முறையை - அதாவது மோசடி செய்து பணம் சுருட்டுவதற்கேற்ற ஒரு முறையை ‘செபி’க்குத் தெரியாமல் இந்த இரண்டு ‘மனுவாதி’களும் உருவாக்கி, தில்லுமுல்லு திருவிளையாடல்களை, ‘ஆன்மீக பலத்துடன்’ ஆண்டவன் அருள் துணையோடு அரங்கேற்றினர். இப்போது ‘மாட்டிக்கிட்டாரு; அய்யரு மாட்டிக்கிட்டாரு’ என்ற தலித் சுப்பையா பாடல் வரிக்கு ஏற்ப சிறையில் கம்பி எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். ‘சிறை சாப்பாடு தீட்டு’ என்று வீட்டு சாப்பாடு கேட்ட ‘ஆச்சார மிக்க’ சித்ராவுக்கு சிறை சாப்பாடும் நன்றாகத்தான் இருக்கும் என்று டெல்லி நீதிமன்ற நீதிபதி கூறிவிட்டார்.*

**இனி தொடரைப் படியுங்கள்.**

*புலனாய்வுத் தணிக்கையை மேற்கொள்ள, செபி ‘டெலாய்ட்’ என்னும் புகழ்பெற்ற தணிக்கை நிறுவனத்தை நியமித்தது. 2015ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தொடங்கி, தணிக்கைச் செயல்பாடுகளைச் செய்து, ‘கோ லொக்கேஷன்’ வணிக முறையில், பல முறைகேடுகள் நடந்ததை ‘டெலாய்ட்’ தன் அறிக்கையில் உறுதி செய்தது. இதைத் தொடர்ந்து, செபி தேசியப் பங்குச் சந்தையின் இயக்குநர் குழுவை மாற்றியமைத்தது. 2016ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் சித்ரா ராமகிருஷ்ணா பதவி விலகினார்.*

*இந்தப் பிரச்சினைகள் நடந்து கொண்டிருக்கும் போதே, ஆனந்த் சுப்ரமணியத்தைக் குழுமச் செயல் தலைவராக நியமித்த முறைகேடு தொடர்பாக 2016ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் ஒரு அனாமதேய கடிதம் வர, அதையும் விசாரிக்குமாறு செபி உத்தரவிட்டது. தேசியப் பங்குச் சந்தை நிறுவனத்தில் ஊழியர்களை நியமிக்க இருந்த ஒரு விதியும் இவர் விஷயத்தில் பின்பற்றப்படவில்லை. விதிகளை மீறி, நிறுவனத்தில் இவர் ஓர் உயர் பதவியில் அமர்த்தப்பட்டார் என்பதை செபியின் விசாரணை அறிக்கை உறுதிசெய்தது.*

*2016ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் கூடிய தேசியப் பங்கு நிறுவனத்தின் இயக்குநர் குழு, ஆனந்த் சுப்ரமணியத்தை உடனடியாக வெளியேற்ற உத்தரவிட்டது. ஒரே நாளில், ஆனந்த் சுப்ரமணியம் வெளியேற்றப்பட்டார்.*

*இதைத் தொடர்ந்து, ‘கோ லொக்கேஷன்’ வணிக முறைகேடுகள் தொடர்பாக செபி நடத்திய விசாரணைகளின் முடிவில், 2019ஆம் ஆண்டு தேசியப் பங்குச் சந்தை நிறுவனத்துக்கு, ரூ.625 கோடி அபராதமும், முறைகேடு நடந்த காலத்திலிருந்து 2019 வரையான காலத்துக்கு, வருடம் 12% வட்டியும் விதித்தது. இந்தக் காலத்தில், தேசியப் பங்குச் சந்தையில் பணிபுரிந்த ரவி நாரயண் மற்றும் சித்ரா ராமகிருஷ்ணாவின் ஊதியத்திலிருந்து 25% தொகையைத் திருப்பிக் கொடுக்கவும் உத்தரவிட்டுள்ளது.*

*இது தவிரவும், சித்ரா, தேசியப் பங்குச் சந்தை நிறுவன நிர்வாகம் குறித்த மிக முக்கியமான தகவல்களையும், நிறுவனத்தின் வணிகப் புள்ளி விவரங்களையும் ஒரு தனிநபரிடம் பகிர்ந்து கொண்ட பல மின்னஞ்சல்கள் தோண்டி எடுக்கப் பட்டன. அவற்றில் பல* **‘ரிக்யஜூர்சாம@அவுட்லுக். காம்’** *என்னும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப் பட்டுள்ளது தெரிய வந்துள்ளது. இதுபற்றிய கேள்விகளுக்குப் பதிலளித்த சித்ரா, ‘அவர் இமய மலையில் வசிக்கும் ஒரு யோகி. அவருக்கு உருவமில்லை’ என்றெல்லாம் அபத்தமான பதில்களைச் சொல்லியிருக்கிறார். இது ஏனையவர்களைப் பைத்தியமாக்கும் முயற்சிதானே தவிர, அவர் தேர்ந்த சித்தத்துடன்தான் செயல்படுகிறார் என்ற குற்றச்சாட்டையே நாம் நம்ப வேண்டியிருக்கிறது.*

*தேசியப் பங்குச் சந்தை நிறுவன நிர்வாகம் குறித்த மிக முக்கியமான தகவல்களையும், நிறுவனத்தின் வணிகப் புள்ளி விவரங்களையும் ஒரு தனிநபரிடம் பகிர்ந்து கொண்ட பல மின்னஞ்சல்கள் தோண்டி எடுக்கப்பட்டன. அவற்றில் பல ‘ரிக்யஜூர்சாம@அவுட்லுக். காம்’ என்னும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப் பட்டுள்ளது தெரியவந்துள்ளது. இதுபற்றிய கேள்விகளுக்குப் பதிலளித்த சித்ரா, ‘அவர் இமய மலையில் வசிக்கும் ஒரு யோகி. அவருக்கு உருவமில்லை’*

*ஏனென்றால், அந்த ‘யோகி’யுடன் இந்தப் பரிவர்த்தனையோடு, சித்ரா ராமகிருஷ்ணாவின் சிகை அலங்காரம் தொடங்கி சீஷெல்ஸ் தீவுகளில் உல்லாசப் பயணம் போவது பற்றிய திட்டங்கள் வரையிலான மின்னஞ்சல்களும்கூட பரிமாறிக் கொள்ளப்பட்டுள்ளன. உருவமில்லா யோகிக்கு எப்படி மின்னஞ்சல் ஐடி வந்தது? ஆனால், சீஷெல்ஸ் தீவுகளில் உல்லாசப் பயணம் போகும் திட்டமெல்லாம் யோகி செய்யும் காரியமா என செபி கேட்டதுபோலத் தெரியவில்லை. மிக முக்கியமாக, இந்தக் குற்றச்சாட்டுகளின் மீதான விசாரணையை செபி ஏன் எதோ ஒரு சாதாரண டிபார்ட்மெண்ட் என்கொயரி போல மென்மையாகவும் மெதுவாகவும் பல ஆண்டுகள் இழுத்தடித்து நடத்துகிறது என்பதும் சந்தேகம் எழுப்பும் செயல்பாடே ஆகும்.*

*இதன் பின்னால் என்ன நடந்தது என்பதை விளக்கும் சுசேதா தலால், இதை, ‘காவலனைச் சிறைபிடித்தல்’ (Regulatory Capture), என்னும் பதத்தை உபயோகித்து விளக்குகிறார்.*

*இந்த வேறுபாட்டை ரவி நாரயணனும், சித்ராவும் மிகச் சாமர்த்தியமாக உபயோகித்துக் கொண்டார்கள். நிதி அமைச்சகத்தில் இருக்கும் அதிகாரிகளுக்கு, தேசியப் பங்குச் சந்தை நிறுவனத்தில் ஆலோசகர் பதவிகளை அள்ளி வழங்கினார்கள். தனியார் நிறுவனம் என்பதால் இதை அவர்களால் எளிதாகச் செய்ய முடிந்தது. அதேபோல, செபியில் உள்ளவர்களுக்கும் சலுகைகள் வழங்கப்பட்டன. திரைமறைவில், அரசியலர்களின் ஆசியும் கிடைத்தது. எல்லாம் அவாள்கள்தான்; பார்ப்பனப் பண்ணையம் கேட்பாரில்லை.*

*தேசிய பங்குச் சந்தை, உலகின் மிகப் பெரும் பங்குச் சந்தைகளுள் ஒன்றாக உருவெடுத்தவுடன், தேசியப் பங்குச் சந்தையும், அதன் நிர்வாக அதிகாரிகளும் மிக ஆணவத்துடன் நடந்து கொள்ளத் தொடங்கினார்கள். விதிமீறல்களைக் கேள்வி கேட்கும் செபியை அலட்சியப்படுத்தினார்கள். அவர்கள் அனுப்பும் தணிக்கை அதிகாரிகளை மோசமாக நடத்தினார்கள்.*

*கடந்த சில பத்தாண்டுகளாக, இந்திய அரசு, அரசு வணிக நிறுவனங்களிலும், பொருளாதாரச் செயல்பாடுகளிலும் இருக்கக் கூடாது என்னும் ஒரு குறுகிய பார்வையில், பெரும் செல்வங்களை வைத்திருக்கும் பொதுத் துறை நிறுவனங்களைத் தனியார் வசம் அளித்துவருகிறது. இதில் தேசத்தின் இறையாண்மையைப் பாதிக்கும் துறையில் இயங்கும் பெட்ரோலிய நிறுவனங்கள், ரயில்வே துறை, விமானப் போக்குவரத்து, தகவல் தொடர்பு முதலிய துறைகள் முக்கியமானவை. இவையனைத்தும் தனியார் வசம் செல்வது, நாளை, இந்திய அரசு என்னும் இயந்திரத்தை, நிதி ஆதாரமற்ற ஒன்றாக மாற்றிவிடும்.*

*தனியார் வசம் செல்வது என்பது இன்று, இந்தத் துறைகள், ஒன்றிரண்டு ஒட்டுண்ணி முதலாளிகள் வசம் செல்வதாக உள்ளது. இந்தப் போக்கு இந்தியாவில் மிகப் பெரும் நிதி ஆதாரங்கள் கொண்ட, அசுர பலம் வாய்ந்த சில முதலாளிகளை உருவாக்கும்.*

*(நிறைவு)*

**– புரட்சிப் பெரியார் முழக்கம் 31.03.2022**

## ‘கடவுளே’ கோயில் கட்டினாலும் நீதிமன்றம் அகற்றும்!

*பொது இடத்தை ஆக்கிரமித்து புதிய கோயில்களை கட்டும்படி எந்த கடவுளும் கேட்பதில்லை என்று குறிப்பிட்டுள்ள சென்னை உயர் நீதிமன்றம், ‘கடவுளே ஆக்கிரமித்திருந்தாலும் அதை அகற்ற நீதிமன்றம் உத்தரவிடும்’ என்றும் கருத்து தெரிவித்துள்ளது. நாமக்கல் நகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் பலபட்டரை மாரியம்மன் கோயில் பொது சாலையை ஆக்கிரமித்து கட்டுமானம் மேற்கொண்டுள்ளதாகவும், அந்த கட்டுமானம் தங்கள் சொத்துக்கு செல்லும் வழியை தடுக்கும் வகையில் உள்ளதாகவும் கூறி பாப்பாயி என்பவர் நாமக்கல் முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். இதில் கோயிலுக்கு எதிராக உத்தரவு வந்தது.*

*இந்த உத்தரவை எதிர்த்து கோயில் நிர்வாகம் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நீதிபதி ஆனந்த் வெங்கடேஷ் முன்பு விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதி, குறிப்பிட்ட பொது பாதையில் கோயில் நிர்வாகம் கட்டுமானங்களை கட்டியுள்ளது ஆவணங்கள் மூலம் தெரியவந்துள்ளது. பொது இடங்களை ஆக்கிரமித்து கட்டுமானங்களை கட்டக்கூடாது என்று பல வழக்குகளில் உத்தரவிடப்பட் டுள்ளது. பொதுசாலையை யார் ஆக்கிரமித்தாலும், அது கோயிலாக இருந்தாலும், அதை தடுக்க வேண்டும். கோயில் என்ற பெயரில் பொது இடத்தை ஆக்கிரமிக்கலாம் என்ற எண்ணம் சிலரிடம் உள்ளது.*

*பொது இடத்தை ஆக்கிரமித்து கோயில் கட்டுங்கள் என்று எந்த கடவுளும் கேட்பதில்லை. கடவுளே பொது இடத்தை ஆக்கிரமித்திருந்தால் அதை அகற்றும்படி நீதிமன்றம் உத்தரவிடும். கடவுள் பெயரால் பொது இடத்தை ஆக்கிரமித்து கோயில் கட்டி நீதிமன்றத்தின் கண்களை மறைக்க முடியாது. ஏற்கனவே போதுமான எண்ணிக்கையில் கோயில்கள் உள்ள நிலையில் பொது இடத்தை ஆக்கிரமித்து புதிய கோயில்களை கட்டுவதை ஏற்க முடியாது என்று உத்தரவிட்டு வழக்கை முடித்துவைத்தார்.*

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/22-24 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/22-24
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# கரூர்–க.பரமத்தியில் எழுச்சி நடைபோட்ட கழகக் கொடியேற்று விழா – கொள்கை விளக்கப் பொதுக் கூட்டம்

22.03.2022 செவ்வாய்கிழமை கரூர் மாவட்டத்தில் கழகக் கொடியேற்று விழா தி.க.சண்முகம் தலைமையில் காலை 11.00 மணிக்கு துவங்கி மாலை வரை நடைபெற்றது.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி, தென்னிலை சமத்துவபுரம், மலைச்சியூர் பிரிவு, சின்னதாராபுரம் பேருந்து நிலையம், அமராவதி ஆற்றுப் பாலம், டி.வெங்கிடாபுரம், இராஜபுரம் பிரிவு, அரவக்குறிச்சி பேருந்து நிலையம், தேர்வீதி, வட்டாட்சியர் அலுவலகம் அருகில், பள்ளபட்டி, அண்ணாநகர், தடா கோவில் ஆகிய 11 இடங்களில் கழகக் கொடியை ஏற்றி வைத்தார்.

கொடியேற்று நிகழ்வில், தமிழன் சு.கவின்குமார், ராம்ஜி (எ) தொல் காப்பியன், இரா.காமராஜ், மலைக் கொழுந்தன், ந.முத்து மருதநாயகம், சிலம்பம் கொ.சரவணன், பெ.ரமேஷ், பெ.குமரேசன், ர.ராகவன், பிரசன்னா, தா.பெரியசாமி, நாகராஜ் அரவக் குறிச்சி ஆகிய தோழர்கள் உடனிருந்தனர்.

மாலை 06.00 மணியளவில் திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் கொள்கை விளக்கப் பொதுக் கூட்டம், கழகத் தோழர் வடிவேல் இராமசாமி தலைமையில் நடைபெற்றது.

பொதுக் கூட்டம் துவங்கும் முன் கழகத் தலைவர் கொளத்தூர் மணி க.பரமத்தி கடைவீதியில் கழகக் கொடியேற்றினார்.

முதல் நிகழ்வாக காவை இளவரசனின் "மந்திரமா தந்திரமா?" அறிவியல் விளக்க நிகழ்ச்சி நடைபெற்றது.

கழக அமைப்புச் செயலாளர் ஈரோடு இரத்தினசாமி, கழகப் பொருளாளர் திருப்பூர் துரைசாமி, தலைமைக் குழு உறுப்பினர் காவை ஈஸ்வரன், தி.க.சண்முகம், வழக்கறிஞர் கரூர் தமிழ் ராஜேந்திரன், சாமானிய மக்கள் கட்சி குணசேகர் ஆகியோர் உரையாற்றினர்.

நிறைவாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி, "தொடர வேண்டும் திராவிடர் ஆட்சி ஏன்?" எனும் தலைப்பில் உரையாற்றினார்.



நிகழ்வில், தலைமைக் குழு உறுப்பினர் சூலூர் பன்னீர் செல்வம், கரூர் மோகன்தாஸ், விஜயகுமார் கடவூர் விஜயமோகன், திருப்பூர் அய்யப்பன், தனபால், முத்து, மாணவர் கழகத்தின் ஆனைமலை சபரிகிரி, திருப்பூர் சந்தோஷ் மற்றும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தோழர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

மேடையில் கழக வார ஏடான புரட்சிப் பெரியார் முழக்கத்திற்கு 10 சந்தாக்களுக்கான தொகை 2500 ரூபாயை கழகத் தலைவரிடம் வடிவேல் ராமசாமி வழங்கினார்.

பொதுக் கூட்டத்தின் போது கழக வெளியீட்டு புத்தகங்கள் 1800 ரூபாய்க்கு விற்பனை ஆகின.

இறுதியில் கலந்து கொண்ட தோழர்களுக்கு இரவு உணவு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பொதுக்கூட்ட நிகழ்வுகளை வடிவேல் இராமசாமி மற்றும் கரூர் கழகத் தோழர்கள் சிறப்பாக ஒருங்கிணைத்து இருந்தார்கள்.

# கடவுளின் தூதர்கள் ‘வருகை’ நின்று போனது ஏன்?

(முதல் பக்கத் தொடர்ச்சி)

வழங்குகிறார். பலர் என்னிடம் கேள்வி கேட்கிறார்கள் நீங்கள் ஒரு சுயமரியாதைக்காரர் ஒரு மதத்தினை எப்படி அடையாளம் காட்டலாம் என கேள்வி கேட்கின்றனர். அதற்கு பெரியாரின் பதில் "நான் சுயமரியாதைக்காரன் தான்; நம்பிக்கை இல்லாதவன் தான். ஆனால் ஒருவன் ஜாதியின் காரணமாக கேவலப்படுத்தபடுகிறான் அவமானப்படுத்தப்படுகிறான், இழிவுபடுத்தப்படுகிறான் அவன் என்னிடம் வந்து கோரிக்கை வைக்கிறான். அய்யா என் மீது உள்ள தீண்டாமை கொடுமை நீங்க வேண்டும் எனக்கு ஒரு வழி சொல்லுங்கள் என்று அப்போது நான் சொல்லுவேன் உன் மதத்தை நீ விட்டுவிடு என்று, அதற்கு அவன் என்னால் விட முடியாது எனக்கு இறந்ததற்குப் பின் சொர்க்கத்திற்கு செல்ல வேண்டும் என்ற ஆசை உள்ளது இந்த மதத்தில் இருந்தால்தான் சொர்க்கத்திற்கு செல்ல முடியும் எனக்கு ஏதாவது வழி சொல்லுங்கள் என்கிறான். நான் சொர்க்கம் இருக்கிறதா இல்லையா என்பதை விவாதிக்க விரும்பவில்லை. அவனுக்கு வழிகாட்ட வேண்டிய அவசியம் இருக்கிறதா இல்லையா சொல்லலாமா வேண்டாமா? அவனுக்குச் சொல்லுகிறேன் நான் சுயமரியாதைக்காரருக்கு இதைச் சொல்லவில்லை. பெண்ணுரிமையைப் பேசுபவர்களுக்கு எப்போதுமே சொல்ல மாட்டேன். ஆனால் தன் மீது உள்ள தீண்டாமை மட்டும் போகாதா என்று ஏங்கிக் கொண்டு இருக்கிற ஒரு தீண்டப்படாத தோழனுக்கு நான் சொல்லுகிற அறிவுரை தான் இஸ்லாமியராக மாறிவிடு என்பதாகும்". கூடவே இதையும் சொல்கிறார் "நீ உண்மை இஸ்லாமியனாக இருந்தால் என்ன பொய் இஸ்லாமியனாக இருந்தால் என்ன நீ இஸ்லாமியனாக வேஷம் போட்டு விடு போதும் உன் மீது உள்ள தீண்டாமை போய்விடும்" என்று கூறுகிறார் பெரியார். இது இஸ்லாமிய கூட்டத்தில் பள்ளிவாசலில் பெரியார் பேசிய பேச்சு. குடிஅரசில் இந்த செய்தி இருக்கிறது.

சுயமரியாதைக்காரருக்கு ஆகவே ஆகாதது மதம் தான். ஆனால், ஒருவர் மீதுள்ள தீண்டாமை போகாதா என்பதற்குத் தான் இஸ்லாம் பரிந்துரைக்கப் பட்டது. பெரியார் இயக்கம் இரண்டு பணிகளை செய்தது. அடிப்படையில் அது இன இழிவு ஒழிப்பு இயக்கம். நம் பெரும்பான்மை மக்கள் மீது சூத்திர, பஞ்சம இழிவு சுமத்தப்பட்டிருக்கிறது அதிலிருந்து விடுவிக்கப்பட வேண்டும் என்பதற்காக தொடங்கப்பட்ட இயக்கம். அதே நேரத்தில் இது பகுத்தறிவு இயக்கமும் தான். ஆனால், அதைவிட இன இழிவு ஒழிப்பிற்கு முன்னுரிமை கொடுத்ததால் தான் இப்படியான(இஸ்லாம் பரிந்துரை) செய்திகளை பேச வேண்டிய தேவை வந்தது. கண்டிப்பாக பகுத்தறிவு பேசியிருந்தால் மதங்களை புறக்கணித்திருந்தால் போதும். ஆனால், ஜாதியும் ஒழிய வேண்டும் என்று பேசியதால் தான் இஸ்லாமாகலாம் என்ற பரிந்துரைகள் பேசப்பட்டன. எனவே, எந்தளவிற்கு அவர்கள் பெண்களை அடக்கி வைத்தார்கள் என்று பெரியாருக்கு தெரிந்திருக்கிறது, அவர் மேடையிலும் குறிப்பிடுகிறார். அதே கூட்டத்தில், "அனைத்து மதங்களும் அழியும் போது இஸ்லாமும் அழியும்" என்று நபிகள் பிறந்தநாள் விழா கூட்டத்தில் பேசினார். பெரியாரை அழைத்தவர்களும் இதையெல்லாம் கேட்டுக்கொண்டுதான் இருந்தார்கள். அவர்களுக்குத் தெரியாதா இது பகுத்தறிவுக்கு ஒவ்வாது, பெண்ணுரிமையை பேணாது என்று. புதிதாக இவர்கள் எங்கிருந்து வந்தார்கள் ? வஹாபிசம், தூய்மையான இஸ்லாத்தைப் பேண வேண்டும் என்று புதியதாக ஒன்றை உருவாக்கிவிட்டார்கள்.

பெண்கள் வெளியே போகக் கூடாது என்று கூறுகிறீர்கள். ஆனால், போர்களத்திற்கு பெண்களே போன செய்திகள் ‘ஹதீஸில்’ உள்ளன. ‘உஸ்மான் கொலைக்குத் தக்க நடவடிக்கை எடுக்கவில்லை என்று அலி மீது ஆயிஷாவிற்கு கோபம். ஆயிஷா தலைமையில் போர் நடக்கிறது. அது இஸ்லாமியர்களுக்கு உள்ளான போர். இஸ்லாமியர் வெட்டி ஏராளமான இஸ்லாமியர்களே சாகிறார்கள். தலைமை தாங்கியது யார் ? ஆயிஷா, நபியின் அன்பு மனைவி. கடவுளின் கடைசி தூதர். அந்த ஒரே கூட்டத்தில் பெரியார் பல செய்திகளை பேசுகிறார். நபிகளை பெரியார் கடைசி தூதர் என்றார் என்று அப்துல்லா(பெரியார் தாசன்) பேசிக் கொண்டிருந்தார். அந்த ஒரு வரியை மட்டும் எடுத்து வைத்துக்கொண்டு. அதற்கு கீழே இருப்பதை அவர் குறிப்பிடவில்லை. "ஒரு காலத்தில் இந்து மதத்தில் கடவுள்கள் நேராக இங்கே வந்தார்கள் என்றார்கள். அது மக்களுக்கு அறிவே இல்லாத காலம். கொஞ்சம் அறிவு வந்த போது கேள்வி கேட்கிறார்களே என்று ‘கடவுளின் மகன் இங்கே இருக்கிறார் என்றார்கள்’ இன்னமும் அறிவு தெளிவு மக்கள் பெற்று கேள்வி கேட்டவுடன், கடவுளின் தூதன் வந்துவிட்டேன் என்று கூறிவிட்டார்கள். அதிலும், தன்னைப்போன்று வேறொருவர் வந்துவிட்டால் என்ன செய்வதென்று எச்சரிக்கையாக நான் தான் கடைசி தூதர் என்றும் கூறிவிட்டார்கள்" என்று இஸ்லாமிய கூட்டத்தில் தான் பெரியார் பேசுகிறார். "இவர் மட்டும் கடைசி தூதர் அல்ல. சைவ மதத்தில் 63 நாயன்மார்களுக்குப் பிறகு 64 ஆவதாகவும் யாரும் வரவில்லை. 12 ஆழ்வார்களுக்குப் பிறகு 13 ஆவது ஆழ்வாரும் வரவில்லை. ஏனென்றால் மக்களுக்கு அறிவு வந்துவிட்டது" நபி கடைசி தூதர் என்பதற்குத்தான் இந்த விளக்கத்தைப் பெரியார் கூறுகிறார். இதை அப்துல்லா பேசாமல், இருட்டடித்தார்.

இப்படிப் பேசித் தான் உறவு பேணப்பட்ட இந்த தமிழ்ச் சமுதாயத்தில், உறவாய் இருந்த தமிழ்ச்சமுதாயத்தில் ஒன்றுபட்டு அரசியல் கோரிக்கைகளில் துணை நிற்கிறோம். அவர்களும் நமது கோரிக்கைகளில் உடன் இருந்தார்கள். அதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. இவற்றையெல்லாம் தெரிந்த கொண்டுதான் நம்மை மத சகிப்புத் தன்மை இல்லாதவர்கள் என்று கூறுகிறார்கள். யாருக்கு சகிப்புத் தன்மை இல்லை என்றுதான் நாம் இப்போது பேச வேண்டியுள்ளது. இந்துத்துவவாதிகள், மாட்டுகறி யாருக்கும் கொடுக்காமல் சாப்பிட்டுக்கொண்டே இருந்தவர்கள், இப்போது மாட்டுக்கறி சாப்பிடாதே என்கிறார்கள். அம்பேத்கர் கூறுவார், "அனைத்து விழாக்களிலும் மாடு கட்டாயம் வெட்டப்படும். எதற்காக என்றால் மாடு புனிதமானது. அதை வெட்டினால் தான் இறைவன் மகிழ்ச்சி அடைவான் என்று வெட்டினார்கள். வெட்டுகிற விவசாயிக்கு ஒருமுறை கூட கிடைக்காது. ஆனால் பூசாரி தினமும் பூசையில் இருப்பான் அவன் தினமும் மாட்டுக்கறி சாப்பிடுவான். எனவே பார்ப்பனர்கள் நாள் தவறாமல் மாட்டிக்கறியை சாப்பிட்டார்கள்" என்று எழுதியுள்ளார். அவனை மட்டும் குறை கூறிவிட்டு நீங்களும் அதே போன்று நடந்து கொள்வது சரியாகாது. இஸ்லாமும் பெண்களும் என்று தலைப்புகூட வைக்கக் கூடாது என்று சகிப்புத்தன்மை துளியும் அற்று இருப்பது யார் என்று இஸ்லாமிய தலைவர்கள் அடையாளம் கண்டு கொள்ள வேண்டும். வாருங்கள் விவாதிக்கலாம். இந்த நேரத்தில் நாம் கூறுவது, இந்து மத அடிப்படை வாதம் வளர்ந்து வருகிறது. இஸ்லாமிய அடிப்படை வாதமும் வளர்ந்து வருகிறது. களையெடுக்காமல் விட்டுவிட்டால் சமூக அமைதி சீர்குலைந்து விடும் என்பதை நாம் பேச விரும்புகிறோம். இதைக் கூட பேச விடக்கூடாது என்றளவிற்கு அடிப்படைவாதம் வளர்ந்திருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நாம் பதிவு செய்கிறோம்.

(நிறைவு)

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 31st March 2022

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN